சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.5008 /அ1/2022 நாள்.13.7.2022

..........

பொருள்: பள்ளிக் கல்வி - 2022 - 2023 ஆம் கல்வியாண்டு - பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் - ஜீலைத் திங்கள் 15 ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக அரசால் அறிவிக்கப்பட்டது - 2022 ஆம் ஆண்டிற்கான கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடுதல் - அனைத்து ஆய்வு அலுவலர்களுக்கும் அறிவுறுத்துதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்.169, பள்ளிக்கல்வி (என்) துறை, நாள்.06.07.2012.
2. அரசாணை (நிலை) எண்.123, பள்ளிக்கல்வி (பக5(1)) துறை, நாள்.15.07.2013.
3. அரசாணை (நிலை) எண்.261, பள்ளிக்கல்வி (பக5(1)) துறை, நாள்.08.07.2017.
4. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.36801/எம்/இ2/2022 நாள்.12.07.2022.

.........

பார்வையில் காண் 1, 2 மற்றும் 3 காண் அரசாணைகளின்படி, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான ஜீலைத் திங்கள் 15 ஆம் நாளினை கல்வி வளர்ச்சி நாளாக அரசால் அறிவிக்கப்பட்டு, ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், பார்வை 4 இல் காண் தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைக்கிணங்க, இவ்வாண்டிற்கான கல்வி வளர்ச்சி நாளிலும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உரிய வழிகாட்டுதலின்படி அனைத்து வகைப் பள்ளிகள் மற்றும் கல்வி அலுவலகங்களிலும் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்தை அலங்கரித்து விழாவினைக் கொண்டாடவும், அவர்களின் அரும்பணிகள் குறித்து மாணவர்களிடையே பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திடவும் அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு அறிவுறுத்திடுமாறு பெருநகர சென்னை கல்வி அலுவலர், அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி வளர்ச்சி நாளை கொண்டாடியதற்கான விவரங்களை தொகுத்து இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து ஆய்வு அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

13.7

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

13/07/2022

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.